www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

9- வகுப்பு

தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8X1=8

1. வேறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

அ) கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம் ஆ) கடி, உறு, கூர், கழி

இ) வினவினான், செப்பினான், உரைத்தான், பகன்றான் ஈ) இன், கூட, கீழ், அம்பு

2. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

3. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார் பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

4. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

5. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

6. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள் ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள் ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

பாடலைப் படித்து விடை தருக.

இருபெரு விசும்பிற் செல்லும்<br>
இளமைதீர் மதியம் தன்னைக்<br>
கருமுகில் தொடர்ந்து செல்லுங்<br>
காட்சி போலதோன்று மாதோ

7. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

அ) குடும்ப விளக்கு ஆ) இராவண காவியம் இ) சிறுபஞ்சமூலம் ஈ) இருண்ட வீடு

8. கருமுகில் - இலக்கணக் குறிப்பு தருக.

அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வேற்றுமைத் தொகை

II. எவையேனும் ஆறனுக்கு விடை தருக. (16 கட்டாய வினா). 6X2=12

9. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:

அ) பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி மலாலா.

ஆ) சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும்.

10. மூவாது மூத்தவர், நூல் வல்லார் -இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

11. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

12. நடுகல் என்றால் என்ன?

13. இசைத்தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?

14. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?



Scanned with CamScanner

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

15. கலைச்சொல் தருக. 1. Social Reformer - ........... 2.Cave Temple ...........

16. பொருத்தமான உரிச் சொற்களை எழுதுக.

அ) ............... பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)

ஆ) ............... சிறந்தது (சால, மழ)

III. எவையேனும் நான்கனுக்கு விடை தருக. (17 கட்டாய வினா) 4X3=12

17. அடிபிறழாமல் எழுதுக.

'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடல் (அல்லது)

'கல்லிடைப் பிறந்த' எனத் தொடங்கும் இராவண காவியப் பாடல்

18. சமைப்பது தாழ்வா? இன்பம் - சமைக்கின்றார் சமையல் செய்வார்!

அ) இன்பம் சமைப்பவர் யார்? ஆ) பாவேந்தர் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?

19. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

20. முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

21. இராவண காவியத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

22. இணைத்து எழுதிப் பாருங்கள்.

| | | |
|---|---|---|
| அவன் | தான் உம் ஏ ஆ | மனிதன் |
| இயற்கை | | அழகு |

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 2 x 5 = 10

23. அ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)

ஆ) கடிதம் எழுதுக.

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் -ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

24) பத்தியில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக:

பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக்காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

V. விரிவான விடையளிக்க. 1 x 8 = 8

25. அ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

(அல்லது)

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதையின் மூலமாக விளக்குக.



Scanned with CamScanner

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

இரண்டாம் இடைப்பருவத்தேர்வு 2023

9 ஆம் வகுப்பு - தமிழ் , விடைக்குறிப்பு

தஞ்சாவூர் மாவட்டம்

1) அ. கலைக்கூடம், திரையரங்கம், ஆடுகளம், அருங்காட்சியகம்

2) ஈ. எதிரமறை வினையெச்சம், உவமைத்தொகை

3) அ. மாமல்லபுரம்

4) இ.முல்லை

5) ஆ. தீர்த்தங்கரர் உருவங்கள்

6) ஈ. ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

7) ஆ. இராவண காவியம்

8) அ. பண்புத்தொகை

9) அ. பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி யார் ?

ஆ. யார் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று அழைக்கப்படும் ?

10) இத்தொடரின் பொருளாவது, நன்மை, தீமை உணர்ந்த நூல்வல்லோர், வயதில் இளையோராக இருப்பினும் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவர் ஆவார்.

11) சாரதா சட்டம் குழந்தை திருமணத்தைத் தடை செய்ய இயற்றப்பட்டது.

12) போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு நடுவது நடுகல் ஆகும்.

13) விஜயநகர மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது.

14) எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக் காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

15) அ. சமூக சீர்த்திருத்தவாதி ஆ. குகை கோயில்

16) அ. மா. ஆ. சால

17) பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,

மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,

www.Padasalai.Net

விதையாமை நாறுவ வித்து உள; மேதைக்கு

உரையாமைச் செல்லும் உணர்வு.

அல்லது

கல்லிடைப் பிறந்த ஆறும்

கரைபொரு குளனும் தோயும்

முல்லைஅம் புறவில் தோன்று

முருகுகான் யாறு பாயும்

நெல்லினைக் கரும்பு காக்கும்

நீரினைக் கால்வாய் தேக்கும்

மல்லல்அம் செறுவில் காஞ்சி

வஞ்சியும் மருதம் பூக்கும்.

18) அ. நல்ல சமையல் செய்பவர்

ஆ. தாழ்வன்று.

19) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.

இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவராகவும், சென்னை மாநகராட்சியின் முதல் துணை

மேயராகவும், சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணியும் ஆவார்.

அடையாற்றில் 1930-ல் அவ்வை இல்லம், 1952 ல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், இருதாரத்தடைச்சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்துள்ளார்.

20) உருவத்தின் முன், பின் பகுதிகள் தெளிவாக முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்கள் முழு உருவச் சிற்பங்கள்

உருவத்தின் முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள்.

www.Padasalai.Net

21) எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக் காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் கா ட்சி போல் உள்ளது.

22) அவன்தான் மனிதன் , அவனும் மனிதன், அவனே மனிதன் , அவனா மனிதன்

இயற்கைதான் அழகு, இயற்கையும் அழகு, இயற்கையே அழகு, இயற்கையா அழகு

23) பாரதிதாசன் இயற்றிய குடும்ப விளக்கு என்னும் நூலில், குடும்பத்தலைவி தன் உள்ளக்கருத்துகளை வெளிப்படுத்தும் போது, பெண்கல்வி குறித்த கருத்துகளையும் வெளிப்படுத்துகிறார். அவ்வாறு தலைவி கூறும், கருத்துகளும், இன்றைய சூழலையும் பார்ப்போம்.

தலைவியின் பேச்சு:

கல்வி இல்லாத பெண்கள் பண்படாத உவர்நிலம் போன்றவர்கள்; அங்கு பயனற்ற புல் விளைந்திடலாம். அறிவார்ந்த புதல்வர்கள் உருவாவதில்லை. கல்வியறிவு பெற்ற பெண்கள், பண்பட்ட நன்செய் நிலம் போன்றவர்கள். அவர்கள் மூலமே சிறந்த அறிவார்ந்த மக்கள் உருவாகின்றனர். பெண்கல்வி இல்லாததினால், இன்று உலகம் ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால், பெண்களுக்கு விடுதலை பறிபோனது. கல்வியறிவு இல்லாத பெண், மின்னல் போல் ஒளிரும் அழகு பெற்றவளாயினும், அவள் வாழ்வு ஒளிர்வதில்லை .

( அல்லது )

அனுப்புநர், பெறுநர், ஐயா , பொருள்,

24) படித்தால்தான் ( தான்) , வீடும் நாடும் ( உம்) , சமுதாயத்தின் ( இன்) பெண்களுக்கும் (உம்)

25) அ. பல்லவர் கால மாமல்லபுரச் சிற்பங்கள் பெரும்பைாறகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவர்கள் இரதத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் அழகாக உள்ளன. காஞ்சி கைலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் சிற்பங்களின் கலைக்கூடமாக திகழ்கின்றன.

தஞ்சைப் பெரிய கோவிலில் காணப்படும் 14 அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும், நந்தியும் வியப்பூட்டும் வண்ணம் உள்ளது.

www.Padasalai.Net

விஜய நகர மன்னர்கள் காலத்தில் மிக உயர்ந்த கோபுரங்கள் சிற்ப வேலப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன. பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அமைத்தன.

நாயக்கர் மன்னர்கள் சிற்ப வேலைபாடுடன் ஆயிரங்களால் மண்டபத்தை அமைத்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரம் கால் மண்டபத்து தூண்களில் கண்ணப்பர், குறவன், குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன். சந்திரமதி சிற்பங்களில் ஆடை ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி சந்திரமதி சிற்பம் நயம் மிக்கது.

கோவைக்கு அண்மையில் உள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்காலச் சிற்பக் கலைநுடபத்தின் உச்சநிலைப் படைப்பு எனலாம்.

விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிகமிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை அமைக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் கலைநயத்திற்கும், வரலாற்றுப் பதிவுகளும் தக்க சான்றுகளாகும்.

ஆ) செய்தி - கதையைச் சுருக்கமாக எழுதியிருப்பின் முழுமதிப்பெண்.

தயாரிப்பு :

எஸ். ஜெயசெல்வன்

பட்டதாரி ஆசிரியர் ( தமிழ் )

பாணாதுறை மேல்நிலைப்பள்ளி

கும்பகோணம்

தொடர்புக்கு : 9443740120.

www.Padasalai.Net